2014 பிப்ரவரி 13] [திரு. கே.ஏ. ஜெயபால்]

இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஏரி மற்றும் குளங்களில் இருப்பு செய்கின்ற பெருவிரலி என்று சொல்கிற மீன் குஞ்சுகளுக்குக்கூட ஒரு ரூபாய் மானியம் தருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆக, பல்வேறு நிலைகளிலே உள்நாட்டு மீனவர்களுக்கான மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே தேரூர் தென்குமரி உள்நாட்டு மீனவர்கள் சங்கம், தோவாளை வட்ட உள்நாட்டு மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம், கன்னியாகுமரி மாவட்ட மீனவர் கூட்டுறவு முனையம் ஆக இம்மூன்று சங்கங்களும் சேர்ந்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையிலே வழக்குத் தொடுத்திருக்கின்றன. பொதுப் பணித் துறையினுடைய அந்த அறிவிப்பிற்குத் தடையாணையைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, மீனவர்களுடைய நலன் காக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்ன சொல்ல வேண்டும் சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பாக தலித் கிறிஸ்தவர்களுக்கும் சலுகைகள் வழங்க மத்திய அரசை வலியுறுத்தி மாநில அரசு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் என்னுடைய ஆய்வில் உள்ளது. நீங்கள் உட்காருங்கள். அதையெல்லாம் நீங்கள் இப்போது எழுப்ப முடியாது. (குறுக்கீடு) என்ன டாக்டர் கிருஷ்ணசாமி, நான் முன்பே உங்களுக்குச் சொல்லிவிட்டேனே? (குறுக்கீடு) அதையெல்லாம் சொல்ல முடியாது. நீங்கள் பேசும்போது எந்தப் பிரச்சினையை எழுப்பப் போகிறீர்கள் என்று

எங்களுக்குத் தெரிகிறது. அது என் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் அவைக்கு வந்த உடனேயே எழுப்ப அனுமதிக்க வேண்டுமென்றால், முடியாது. சபையிலே வந்து இப்படியெல்லாம் பேசுவது முறையில்லை. டாக்டர் கிருஷ்ணசாமி உங்களுக்கு முன்பே சொல்லிவிட்டேன். திரும்பத் திரும்ப நீங்கள் அவையை நடத்தவிடாமல், என்னை அடுத்த அலுவலுக்குப் போகவிடாமல், எழுந்து நின்று பேசுவது சரியல்ல. நீங்கள் பேசுவது சரியல்ல. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அதற்கெல்லாம் வாய்ப்பு இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

7. மானியக் கோரிக்கைகள், 2015–2016, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 45 – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

(ஆ) கோரிக்கை எண் 52 – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

(இ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை

(அ) கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் வெற்றித் தாய், வீரத் தாய், தங்கத் தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, என்னுடைய மானியக் கோரிக்கையை தொடங்குகிறேன்.*